| புள்ளி | **வலயக் கல்வி அலுவலகம், கிண்ணியா**<br>தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான<br>முன்னோடிப் பயிற்சிப் பரீட்சை -2024<br>**திறன் : அவதானிப்பு** | **இல**<br>**1** |
|---|---|---|

**சரியான விடையின் கீழ் கீறிடுக** **2011**

01. முறிந்த கோடுகளினால் காட்டப்பட்டுள்ள மூன்று பாதைகளில் நீளம் குறைந்த பாதை யாது?



(1) (2) (3)

02. சதுரமுகியை அமைக்கத்தக்க உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

03. பிழையான கோவையைத் தெரிவு செய்க.

(1) 6 x 6 - 6 = 30 (2) 5 x 5 + 5= 30 (3) 33 - 33 - 3 = 30

04. சரியான கோவையைத் தெரிவு செய்க.

(1) 888 + 88 + 88 + 8 + 8 = 1000

(2) 888 + 88 + 8 + 8 + 8 = 1000

(3) 888 + 88 + 88 + 8 + 8 + 8 = 1000

**2013**

பின்வரும் வரிப்படத்தைப் பார்த்து வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.




05. வரிப்படத்திற்கு ஏற்ப ஒரு முயல் இருக்கத்தக்க இரண்டு இடங்கள்

(1) 2உம் 4உம் (2) 3உம் 5உம் (3) 1உம் 2உம்

06. ஒரு பறவை இருக்கத்தக்க இடத்தையும் ஒரு மீன் இருக்க **முடியாத** இடத்தையும் முறையே காட்டுவன.

(1) 1உம் 4உம் (2) 3உம் 6உம் (3) 2உம் 5உம்

Tamil Study



நிதி : CF

07. ஒரு கடிகாரத்தின் மணித்தியால முள்ளும் நிமிடம் முள்ளும் செங்கோணத்தில் இருக்கும் இரு சந்தர்ப்பங்களில் உள்ள நேரங்களை காட்டும் விடை யாது?

(1) 6. 15 உம் 12. 15 உம் (2) 3.00 உம் 9. 00உம் (3) 3. 30 உம் 9. 30 உம்

ஓர் அடைப்பின் ஒரு பக்கத்தின் நீளம் 10 மீற்றர் ஆக இருக்குமாறு வரையப்பட்டுள்ள ஒரு பாதை நெய்யரி கீழே காணப்படுகின்றது.




08. மேற்குறித்த பாதை நெய்யரியில் கமலா A யிலிருந்து D யினூடாக B யிற்கும் முரளி B யிலிருந்து C யினூடாக A யிற்கும் பயணம் செய்தனர். இதற்கேற்ப

(1) கமலாவும் முரளியும் ஒரே அளவு தூரத்திற்கு பயணஞ் செய்துள்ளனர்.
(2) முரளி கமலாவிலும் கூடுதலான தூரம் பயணம் செய்துள்ளான்
(3) இருவரும் பயணஞ் செய்த மொத்த தூரம் 220 மீட்டர் ஆகும்

09. மேற்குறித்த பாதை நெய்யரியில் A யிலிருந்து C யினூடாக E வரையுள்ள மிகக் குறுகிய தூரம்.

(1) 50 மீற்றர் (2) 90 மீற்றர் (3) 100 மீற்றர்

10. பின்வரும் ஒளிப்படத்தைப் பார்க்க. அந்த ஒளிப்படம் நாளில் எந்த நேரத்தில் எடுக்கப்பட்டது என்பதை தரப்பட்ட விடைகளிலிருந்து தெரிவு செய்க.



(1) மு.ப 6.00 அளவில்
(2) மு.ப 10.00 அளவில்
(3) நண்பகல் 12.00 அளவில்

**2014**

11. அம்புக் குறிகள் மூலம் காட்டப்படும் பாதைகள் வழியே A இலிருந்து B வரைக்கும் செல்வதற்கான மிகக் குறுகிய பாதையைக் காட்டும் உரு யாது?



(1)



(2)



(3)

- றம்புட்டான் மரம் உருவில் காணப்படுகின்றது. அதனைக் கொண்டு **12, 13**ஆகிய வினாக்களுக்கு விடை தருக




12. இரவில் றம்புட்டான் பழத்தைச் சாப்பிடுவதற்கு இம்மரத்திற்கு வரும் விலங்கு
(1) ஆந்தை
(2) செண்பகம்
(3) வௌவால்

13. தண்டில் இடம் A இல் ஒரு பொந்தை அமைக்கக்கூடிய விலங்கையும், இலைகளினால் இடம் B இல் ஒரு கூட்டை அமைக்கக்கூடிய விலங்கையும் முறையே காட்டும் விடையைத் தெரிவு செய்க.
(1) மரங்கொத்தி, முசிறு (2) கிளி, மயிர் கொட்டி (3) மரங்கொத்தி, மயிர் கொட்டி

14. ஒரே சிலந்தி வலையின் 3 படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அம்புக்குறிகளினால் காட்டப்படும் பாதைகள் வழியே செல்லும்போது சிறிய சிலந்தி P இலிருந்து Q இற்குச் செல்லத்தக்க **தூரம் கூடிய** பாதையைக் காட்டும் உருவைத் தெரிவு செய்க.



(1)



(2)



(3)

15. பின்வரும் வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.
(1) கெக்கு இரையை விழுங்குகின்றது.
(2) கொக்கு இரையை விழுங்குகின்றது.
(3) கொக்கு இரையை விழுங்குகின்றன.

16. 'புளகாங்கிதம்' என்னும் சொல்லில் உள்ள எழுத்துக்கள் மூலம் ஆக்கக்கூடிய ஒரு சொல்
(1) பூங்கா (2) தங்கம் (3) காம்பு

17. தரப்பட்டுள்ள மூன்று உருக்களில் ஓர் உரு மற்றைய உருக்களிலிருந்தும் வேறுபட்டது. அவ் வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.


(1)


(2)


(3)

18. கீழே தரப்பட்டுள்ள உருக்களில் ஓர் உரு ஏனைய இரு உருக்களிலிருந்தும் வேறுபட்டுள்ளது அவ்வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

19. கீழே தரப்பட்டுள்ள உருக்களில் வளைகோடுகள் மாத்திரம் உள்ள உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

20. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க

(1) நாம் கடைமைகளை நிறைவேற்றுவோம்.

(2) நாம் கடமைகளை நிறைவேற்றுவொம்

(3) நாம் கடமைகளை நிறைவேற்றுவோம்

21. 'திடசங்கற்பம்' என்னும் சொல்லில் உள்ள சில எழுத்துக்களைக் கொண்டு ஆக்கத்தக்க கருத்துள்ள சொல்.

(1) கபடம் (2) கப்பம் (3) சாகசம்

● 22, 23 ஆகிய வினாக்களில் உள்ள கோலத்திற்கேற்ப அடுத்து வர வேண்டிய உருவைத் தெரிவு செய்க.

22.







(1) (2) (3)

Tamil Study

23.



(1) (2) (3)

24. ஒரு நாளில் நடைபெற்ற சுற்றாடல் தின நிகழ்ச்சித்திட்டம் ஒன்றில் ①,②,③,④ என்னும் நிகழ்ச்சிகள் தொடங்கிய நேரங்கள் கீழே உள்ள கடிகார முகங்களில் காணப்படுகின்றன



① ② ③ ④

ஒரு நிகழ்ச்சி முடிவடைந்தவுடன் அடுத்த நிகழ்ச்சி ஆரம்பமாகியது. நிகழ்ச்சி ④ ஆனது ந.ப. 12.00 இற்கு முடிவடைந்தது. கூடுதலான நேரம் நடைபெற்ற நிகழ்ச்சி யாது?

(1) ① (2) ② (3) ③

25. மூன்று கம்பிச் சட்டங்கள் கீழே காணப்படுகின்றன. முனை P இல் இருக்கும் ஓர் எறும்பு ஒரே பாதையில் இரு தடவைகள் செல்லாமல் எல்லாப் பாதைகளிலும் செல்லத்தக்க சட்டம் யாது?




(1) (2) (3)

26.  ஆகும். கீழே தரப்பட்டுள்ள எத்தொடர்பு சரியானது?



Tamil Study



நிதி : CF

**2017**

● 27, 28 ஆகிய வினாக்களில் ஓர் உரு ஏனைய இரு உருக்களிலிருந்தும் வேறுபடுகின்றது. வேறுபடும் உருவைத் தெரிவு செய்க.

27.



(1) (2) (3)

28.



(1) (2) (3)

29.




பின்வரும் உருவில் கமலன் உட்பட 20 மாணவர்கள் வட்டமாக அமர்ந்திருக்கும் விதம் காட்டப்பட்டுள்ளது
அவர்கள் எல்லோரும் கமலனிலிருந்து முறையே 1,2,3, 1, 2, 3..... எனக் கூறியவாறு வட்டத்தைச் சுற்றி இரு தடவைகள் எண்ணுகின்றனர் இவ்வாறு முதற் சுற்றில் 1 எனக் கூறி எண்ணும் கமலன் இரண்டாம் சுற்றில் எண்ணும்போது கூறும் இலக்கம் யாது?

(1) 1 (2) 2 (3) 3

30. பின்வரும் இரு திண்மங்கள் தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியானதைத் தெரிவு செய்க.



(1) விளிம்புகளின் எண்ணிக்கை உச்சிகளின் எண்ணிக்கையிலும் குறைவானது
(2) உச்சிகளின் எண்ணிக்கை முகங்களின் எண்ணிக்கையிலும் குறைவானது.
(3) முகங்களின் எண்ணிக்கை விளிம்புகளின் எண்ணிக்கையிலும் குறைவானது.

**2018**

● 31, 32 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை ஒத்த உருவைத் தெரிவு செய்க.

31.



(1) (2) (3)

Tamil Study

32. 

(1) (2) (3)

33. ஓர் எரியும் மெழுகுவர்த்தியின் உயரம் அது கொளுத்தப்பட்ட கணத்திலிருந்து எடுத்த நேரத்துடன் மாறும் விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.



எரியும் கணம் | 5 நிமிடத்திற்குப் பின்னர் | 10 நிமிடத்திற்குப் பின்னர் | 15 நிமிடத்திற்கு பின்னர் | 20 நிமிடத்திற்குப் பின்னர்

இதற்கேற்ப மெழுகுவர்த்தி மேலும் எவ்வளவு நேரத்திற்கு எரியுமென ஊகிக்கலாம்?

(1) 5 நிமிடம் (2) 10 நிமிடம் (3) 15 நிமிடம்

- உருவில் ஒவ்வொரு பக்கத்திலும் நிற மை பூசப்பட்டுள்ள ஒரு திண்ம மரக்குற்றி தரப்பட்டுள்ளது அதனை முறிந்த கோடுகள் வழியே வெட்டி பல சிறிய மரக்குற்றிகள் பெறப்பட்டன. அதனைக் கொண்டு **34, 35** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.



34. முறிந்த கோடு வழியே வெட்டும்போது எத்தனை சிறிய மரக் குற்றிகள் கிடைக்கும்?

(1) 21 (2) 36 (3) 42

35. ஒரு பக்கத்தில் மாத்திரம் நிற மை பூசப்பட்டுள்ள எத்தனை சிறிய மரக் குற்றிகள் கிடைக்கும்?

(1) 8 (2) 10 (3) 12

36. உருவில் நான்கு ஈரக்குத் துண்டுகள் உள்ளன.



அந்த நான்கு ஈர்க்குத் துண்டுகளையும் பயன்படுத்தி அமைக்கத்தக்க வடிவத்தைக் காட்டும் உரு யாது?



(1) (2) (3)

Tamil Study

- ஒரு பாடசாலையின் சில இடங்களின் அமைவையும் அவ்விடங்களுக்குச் செல்வதற்கான ghi j f i s Ak; f hl Ļk; gl k; f Ro j uggl Ļs s J . mj i d f ŗf hz Ļ **37, 38** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.




37. ஒரு மாணவன் காலையில் பிரதான கதவினூடாகப் பாடசாலைக்குள் பிரவேசிக்கும் போது அவனுடைய வலது கைப் பக்கத்தில் சூரியன் உதித்துக் கொண்டு இருந்தது. அதற்கு ஏற்ப நூலகம் வகுப்பிற்கு எத்திசையில் உள்ளது?
    (1) வடக்கு (2) மேற்கு (3) தெற்கு

38. ஒரு மாணவன் பிரதான கதவினூடாகத் தனது வகுப்பறைக்குப் செல்லும்போது இடதுகைப் பக்கத்திற்கும் வலப்பக்கத்திற்கும் திரும்பும் தடவைகளின் எண்ணிக்கை யாது?
    (1) இடப் பக்கத்திற்கு 3 உம் வலது பக்கத்திற்கு 2 உம்.
    (2) இடப் பக்கத்திற்கு 2 உம் வலது பக்கத்திற்கு 3 உம்.
    (3) இடப் பக்கத்திற்கு 4 உம் வலது பக்கத்திற்கு 3 உம்.

**2019**

39. 39, 40 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து விடை தருக.



உரு A உரு B

A, B ஆகிய இரு உருக்களுக்குமிடையே எத்தனை வேறுபாடுகள் உள்ளன?

(1) 1 (2) 2 (3) 3

40.



உரு C உரு D

C, D ஆகிய இரு உருக்களுக்குமிடையே உள்ள வேறுபாடுகளின் எண்ணிக்கை.
(1) நான்கிலும் குறைவாகும் (2) நான்காகும் (3) நான்கிலும் கூடவாகும்

Tamil Study

| புள்ளி | வலயக் கல்வி அலுவலகம், கிண்ணியா<br>தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முன்னோடிப் பயிற்சிப் பரீட்சை -2024<br>**திறன்: பொருள் உரைத்தல், எதிர்வு கூறல், உள்ளக இடைத் தொடர்பு** | இல 2 |
|---|---|---|

**சரியான விடையின் கீழ் கீறிடுக.** **2011**

- அட்டவணையில் உள்ள தகவல்களுக்கேற்ப விடை எழுதுக.

| நாள் | ஜனவரி 31 | பெப்ரவரி 28 | மார்ச் 31 | ஏப்ரல் 30 | மே 31 |
|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 31 | 59 | ……… . | 120 | 151 |

01. மார்ச் 31ஆந் திகதிக்குப் பொருத்தமான எண் யாது?
(1) 89 (2) 87 (3) 90

02. எண் 100 இற்குப் பொருத்தமான திகதி யாது?
(1) ஏப்ரல் 01 (2) ஏப்ரல் 10 (3) ஏப்ரல் 20 **2015**

03. மாலை நேரங்களில் வடமத்திய, கிழக்கு மாகாணங்களில் இடையிடையே இடியுடன் கூடிய மழை பெய்யுமென வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது. இவ் அறிவித்தலுக்கு அமைய மழை பெய்யக்கூடிய இரு நகரங்கள் முறையே
(1) வவுனியா, மட்டக்களப்பு
(2) பொலன்னறுவை, கதிர்காமம்
(3) அனுராதபுரம், அம்பாறை

04. ஒரு கடிகாரத்தில் மணித்தியால முள்ளுக்கும் நிமிட முள்ளுக்குமிடையேயுள்ள கோணம் ஒரு செங்கோணத்திலும் பார்க்க குறைவாக இருக்கும் சந்தர்ப்பம். பின்வரும் எந்நேரத்தில் காட்டப்படுகிறது?
(1) மு.ப 9. 30 (2) பி.ப 12. 15 (3) பி.ப 3. 40 **2016**

- ஒரு சிறிய சந்தையில் உள்ள விற்பனைக் கூடங்களின் மாதிரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது அதனைக்கொண்டு **5, 6** ஆகிய வினாக்களுக்கு விடை தருக

| சிறிய சந்தை 2016 | | | |
|---|---|---|---|
| ①<br>உலர் உணவுப் பொருள்கள் | ②<br>மரக்கறி | ③<br>பழங்களும் கீரை வகைகளும் | ④<br>பூக்கன்றுகள் |

05. சீனி, வல்லாரை, வாழைப்பழம் ஆகியவற்றை வாங்குவதற்குச் செல்ல வேண்டிய விற்பனைக் கூடங்களின் எண்கள் யாவை?
(1) ①, ② ஆகியன (2) ①, ③ ஆகியன (3) ②, ③ ஆகியன

06. தராசு **பயன்படுத்தப்படாத** கூடமாக இருக்கத்தக்கது யாது?
(1) ① (2) ③ (3) ④


நிதி : CF
Tamil Study

- கீழே தரப்பட்டுள்ள அறிவித்தற் பலகையைக் கொண்டு **07, 08** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

| **சுதேச மருத்துவ நிலையம்** |
|---|
| சனிக்கிழமை தவிர வாரத்தில் ஒவ்வொரு நாளும்<br>மு.ப 9.00 தொடக்கம் பி.ப 1.00 வரைக்கும்<br>பி.ப 2.00 தொடக்கம் பி.ப 5.00 வரைக்கும் சிகிச்சை அளிக்கப்படும் |

07. மருத்துவர் நோயாளிகளுக்கு ஒரு வாரத்திற்குச் சிகிச்சை அளிப்பதற்கு எதிர்பார்க்கும் மணித்தியாலங்கள் எண்ணிக்கை

(1) 24 (2) 42 (3) 49

**2017**

08. ஒரு குறித்த நேரத்தில் ஒரு பாதை வழியே சென்ற வாகனங்கள் பற்றிய தகவல்கள் இவ்வரைபில் தரப்பட்டுள்ளன. அந்நேரத்தில் அப்பாதையில் சென்ற மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை பின்வரும் எவ்விரு வாகன வகைகளின் எண்ணிக்கைகளின் கூட்டுத்தொகைக்குச் சமம்




(1) பேருந்துகளும் மோட்டார் வாகனங்களும்
(2) மோட்டார் வாகனங்களும் முச்சக்கர வண்டிகளும்
(3) முச்சக்கர வண்டிகளும் பேருந்துகளும்

**2018**

09. எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போல் என்பதன் கருத்தை விளக்கும் கூற்று யாது?
(1) தேவையானபோது உதவுதல்
(2) பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தலையிடுதல்
(3) பிரச்சினையைக் கூட்டுவதற்குச் செயற்படுதல்

10. தனது பணிகளில் மாத்திரம் ஈடுபடும் முரளி ஏனையோருடன் பழகுவதற்கு அல்லது உலகில் நடைபெறுபவற்றை கண்டு அறிவு பெறுவதற்கு முயலுவதில்லை. இதற்கு பொருத்தமான பழமொழி யாது?
(1) எது எப்படிப் போனாலும் தன் காரியம் தனக்கு
(2) கிணற்றுத் தவளை போல
(3) தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்

11. ஒரு பிள்ளை ஒரு வாரத்தில் தனது பாடசாலையைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் மழையும் வெயிலும் இருந்த விதம் பற்றி உருக்களின் மூலம் குறித்திருந்த விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.




Tamil Study

அவ்வாரத்தில் இருந்த வானிலை நிலைமை பற்றிய சரியான கூற்று யாது?

(1) கடும் மழை பெய்த, வெயில் இல்லாத வாரம்.
(2) நல்ல மழை பெய்த அவ்வாறே வெயிலும் இருந்த வாரம்
(3) அதிக நாட்கள் வெயில் இல்லாமல் மழை பெய்த வாரம்

**2019**

- பின்வரும் அட்டவணையைப் பார்க்க.

| | முதலாம் நிரல் | இரண்டாம் நிரல் | மூன்றாம் நிரல் |
|---|---|---|---|
| முதலாம் நிரை | A | B | C |
| இரண்டாம் நிரை | F | E | D |
| மூன்றாம் நிரை | G | H | I |

கீழே உள்ள படிமுறை 1 இலும் படிமுறை 2 இலும் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அட்டவணை மாற்றப்படுகின்றது. அதனை பயன்படுத்தி 12, 13 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

படிமுறை 1 - முதலாம் நிரை இருக்கும் இடத்திற்கு இரண்டாம் நிரையையும் இரண்டாம் நிரை இருந்த இடத்திற்கு முதலாம் நிரையையும் மாற்றல்.

படிமுறை 2 - இரண்டாம் நிரல் இருக்கும் இடத்திற்கு மூன்றாம் நிரலையும் மூன்றாம் நிரல் இருந்த இடத்திற்கு இரண்டாம் நிரலையும் மாற்றல்

12. மாற்றங்களைச் செய்த பின்னர் அட்டவணையின் நடு அடைப்பில் இருக்கும் எழுத்து யாது?
(1) B (2) C (3) D

13. ஆரம்பத்தில் இருந்த அட்டவணையில் எழுத்து I இருந்து இடத்திற்கு மாற்றங்களைச் செய்த பின்னர் வரும் எழுத்து யாது?
(1) H (2) G (3) D

**2020**

14. ராஜவிடம் இருந்து பணத்தொகையை விட 25 ரூபாய் கூடுதலாக ஆஷாவிடம் இருந்தது ஆஷா 15 ரூபா ராஜாவுக்கு கொடுத்தால், ராஜாவிடம் உள்ள பணத்தொகை ஆஷாவிடம் உள்ள பணத் தொகையிலும்
(1) ஐந்து ரூபாவினால் கூடியது
(2) பத்து ரூபாவினால் கூடியது
(3) பத்து ரூபாவினால் குறைந்தது.

Tamil Study

**2013**

## திறன்: எதிர்வு கூறல்

15. அருணன் இந்திரனிலும் உயரம் கூடியவன். சந்திரன் அருணனிலும் உயரம் குறைந்தவன் இதற்கேற்ப சரியான கூற்று
(1) இந்திரனிலும் சந்திரன் உயரம் கூடியவன்
(2) இந்திரன், சந்திரன் ஆகிய இருவரிலும் உயரம் கூடியவர் எவரெனக் கூறுதல் கஷ்டம்
(3) இந்திரனும் சந்திரனும் சம உயரம் உள்ளவர்கள்

**2016**

● கீழே தரப்பட்டுள்ள அறிவித்தற் பலகையைக் கொண்டு **16, 17** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

| **சுதேச மருத்துவ நிலையம்** |
|---|
| சனிக்கிழமை தவிர வாரத்தில் ஒவ்வொரு நாளும்<br>மு.ப 9.00 தொடக்கம் பி.ப 1.00 வரைக்கும்<br>பி.ப 2.00 தொடக்கம் பி.ப 5.00 வரைக்கும் சிகிச்சை அளிக்கப்படும் |

16. அறிவித்தல் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுக்கேற்ப பின்வரும் எக்கூற்று சரியானது?
(1) நோயாளிகள் மருத்துவ நிலையத்தில் தங்கியிருந்து சிகிச்சை பெறலாம்.
(2) மருத்துவர் தொற்று நோய்களுக்கும் மாத்திரம் சிகிச்சையளிக்கிறார்.
(3) மருத்துவர் மருந்துகளுக்காக பெரும்பாலும் தாவரப் பொருள்களை பயன்படுத்துகின்றார்.

**2017**

17. வாகன உரிமையாளர்கள் அனைவரும் செல்வந்தர்கள் **அல்லர்** எனின்,
(1) செல்வந்தர் ஒருபோதும் வாகன உரிமையாளர்கள் அல்ல
(2) வாகன உரிமையாளர்களாக இல்லாத எல்லோரும் செல்வந்தர் ஆவர்.
(3) சில வாகன உரிமையாளர்கள் செல்வந்தர்கள் அல்லர்.

**2018**

18. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் சென்ற ஒரு பேருந்து சில நகரங்களைக் கடந்து சென்ற விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.
''அது பூனாவ நகரத்தைக் கடந்து செல்வதற்கு முன்னர் மாரவில நகரத்தைக் கடந்து சென்றது அது பூனாவ நகரத்தைக் கடந்து சென்ற பின்னர் மாங்குளம் நகரத்தைக் கடந்து சென்றது''

பேருந்து யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு அதே பாதையில் திரும்பி வரும்போது அந்நகரங்களை கடக்கும் ஒழுங்கு முறை யாது?
(1) பூனாவ, மாங்குளம், மாறவில, (2) மாறவில, பூனாவ, மாங்குளம்
(3) மாங்குளம், பூனாவ, மாரவில

tamilstudy

**2019**

19. ஒரு வகுப்பில் உள்ள பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையினதும் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையினதும் மொத்தம் அவ்வகுப்பில் உள்ள ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையின் இருமடங்காகும். இத்கேற்ப சரியான கூற்று
   (1) ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையிலும் பார்க்க பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை கூடியது
   (2) பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையிலும் பார்க்க ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை கூடியது
   (3) ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையும் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை சமம்

**2020**

20. அமலன், கமலன், சமன் ஆகிய மூன்று நண்பர்களதும் தங்கைகள் மூவரும் கீதா, ராணி, சீதா ஆவர். கீதாவுடன் அமலனின் தங்கை அமர்ந்திருக்கிறார். கமலலின் தங்கை கீதா அல்ல எனின் சமனின் தங்கை யார்?
   (1) கீதா (2) ராணி (3) கீதா

## திறன்: உள்ளக இடைத் தொடர்பு

**2011**

● வெற்று அடைப்புக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

*21.*




*22.*




**2015**

23. உருவில் உள்ள ஒவ்வொரு சிறிய கட்டத்தினதும் நீளமும் அகலமும் சமம். உருவிலுள்ள சதுரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
   (1) 12
   (2) 15
   (3) 17



Tamil Study

**2012**

● தரப்பட்டுள்ள உருக்களைக் கவனத்திற்கொண்டு விடை தருக.



P Q R S T

24. P.,Q ஆகிய இரண்டையும் ஏனையற்றிலிருந்து வேறுபடுத்தும் இயல்பு யாது?
(1) இறைச்சியை மாத்திரம் உணவாகக் கொள்ளல்
(2) வீடுகளை அண்டி வசித்தல்
(3) இரவில் சுறுசுறுப்பாக இருத்தல்

25. Q,R ஆகியவற்றில் காணப்படும், ஆனால் P,S ஆகியவற்றில் **இல்லாத** இயல்பு யாது?
(1) பழங்களை உணவாகக் கொள்ளல்
(2) குடிபெயரும் பறவைகளாக இருத்தல்
(3) நீரை அண்டி வசித்தல்.

● வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

26.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | 7 | 12 | | | |
| 7 | 12 | 17 | | | |
| 12 | 17 | .......... | 20 | 22 | 25 |
| | | | (1) | (2) | (3) |

27.



....................

 (1)

 (2)

 (3)

**2013**

● தரப்பட்டுள்ளவற்றிடையே **மூன்றை** ஒரு கூட்டமாகவும் **இரண்டை** வேறொரு கூட்டமாகவும் ஆக்கலாம். அவற்றில் **இரண்டு** இருக்கும் கூட்டத்திற்கு உரியவை யாவை?

28. பத்திரிகை, பாடசாலை, சஞ்சிகை, நூலகம், புத்தகம்
(1) பாடசாலையும், புத்தகமும்
(2) புத்தகமும், நூலகமும்
(3) நூலகமும், பாடசாலையும்

29. மாம்பழம், பணியாரம், அன்னாசி, பாற்சோறு, வாழைப்பழம்,
(1) பாற்சோறும், வாழைப்பழமும்
(2) வாழைப்பழம், பணியாரமும்
(3) பணியாரமும், பாற்சோறும்

Tamil Study

30.

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 1 | 6 |
| 4 | .... | 3 | 24 |
| 2 | 3 | .... | 30 |
| 16 | 18 | 15 | |

(1) 5, 3 (2) 2, 5 (3) 3, 2

31.




உருவில் உள்ள A, B, C எனும் வட்டங்கள் ஒன்றையொன்று ஒத்தவை. அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு 10 சதுர சென்றி மீற்றர் ஆகும். முழு உருவத்தின் பரப்பளவு பற்றிய சரியான கூற்று யாது?

(1) 60 சதுர சென்றி மீற்றரிலும் குறைவாகும்
(2) 60 சதுர சென்றி மீற்றராகும்.
(3) 60 சதுர சென்றி மீற்றரிலும் கூடியதாகும்.

32. இவ்வுருவுடன் தொடர்புபட்ட சரியான கூற்றைத் தெரிவு செய்க.




(1) பகுதி A ஆனது சிவப்பு, நீலம், மஞ்சள் எனும் மூன்று நிறங்களுக்கும் உரியது
(2) B, C ஆகிய பகுதிகள் மஞ்சள் நிறமுள்ளவை.
(3) பகுதி C நீலநிறமாக இருக்கும் அதேவேளை பகுதி D சிவப்பு நிறமானது

**2014**

- **33** ஆம் **34** ஆம் வினாக்களில் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய உருவைத் தெரிவு செய்க

33.





(1) (2) (3)

34.





(1) (2) (3)

Tamil Study

- எட்டு மாணவர்கள் தொலைக்காட்சியைப் பார்த்து இரசித்தல், கதைப்புத்தகங்களை வாசித்தல், முத்திரைகள் சேகரித்தல் என்னும் பொழுது போக்குகளில் ஈடுபடும் விதம் உருவில் காணப்படுகின்றது. உருவைக் கொண்டு **35, 36, 37** ஆம் வினாக்களுக்கு விடை தருக




35. மூன்று பொழுதுபோக்குகளிலும் ஈடுபடும் மாணவன் யார்?
(1) அமீர் (2) ரவி (3) அருண்

36. இரண்டு பொழுதுபோக்குகளில் மாத்திரம் ஈடுபடும் மாணவர்கள் யாவர்?
(1) முரளி, அமீர், விமலன் (2) விமலன், ஷான், கண்ணன் (3) முரளி, அமீர், ரவி

37. முரளி, அமீர் ஆகிய இருவரும் எத்தனை பொழுது போக்குகளில் ஈடுபடுகின்றனர்?
(1) 2 (2) 3 (3) 4

- கோலத்திற்கேற்ப **38** ஆம் **39** ஆம் வினாக்களின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க

38.



(1) 4 (2) 6 (3) 12

39.



(1) 44 (2) 54 (3) 63

**2015**

40. தரப்பட்டுள்ள உருவில் ? குறியினால் காட்டப்படும் நிரலில் இருக்கவேண்டிய குறியீட்டுக் கூட்டம் யாது?






(1) (2) (3)

Tamil Study

| புள்ளி | **வலயக் கல்வி அலுவலகம், கிண்ணியா**<br>தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான<br>முன்னோடிப் பயிற்சிப் பரீட்சை -2024<br>**– புலக்காட்சி, மொழி பெயர்ப்பு –** | **இல 3** |
|---|---|---|

**சரியான விடையின் கீழ் கீறிடுக** **2011**

- உருவைப் பூரணப்படுத்த தேவையான பகுதியை தெரிவு செய்க.

*01.*



(1) (2) (3)

*02.*



(1) (2) (3)

**2012**

- அடைப்புக்குள் இருக்கும் இரு கோலங்களையும் ஒன்றன்மீது ஒன்றாக வைக்கும் போது கிடைக்கும் உருக்களைத் தெரிவு செய்க.

*03.*



*(1)* *(2)* *(3)*

*04*



*(1)* *(2)* *(3)*

*05.* தரப்பட்டுள்ள வடிவத்தைக் கொண்டு ஒரு சதுரமுகியை அமைக்கும் போது அது தோற்றும் விதத்தைத் தெரிவு செய்க.



*(1)* *(2)* *(3)*

Tamil Study

 நிதி: CF

*06.* உருவில் உள்ள திண்மத்தில் இருக்கும் மேற்பரப்புகளின் எண்ணிக்கை யாது?



*(1) 10* *(2) 12* *(3) 14*

**2013**

● தொடக்கத்தில் உள்ள உருவில் குறைவாக இருக்கும் பகுதிக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

07.





(1)



(2)



(3)

08.





(1)



(2)



(3)

*09.* வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.






*(1)*



*(2)*



*(3)*

*10.* பின்வரும் உருவில் அட்டை தாளினால் செய்யப்பட்ட ஒரு பெட்டி உள்ளது அது விரிக்கப்படும் போது தோன்றும் விதம் யாது?







(1)




(2)




(3)

Tamil Study

11. உருவில் உள்ள பொருளை ஒரு சதுரமுகியாகப் பூரணப்படுத்துவதற்கு மேலும் எத்தனை சிறிய சதுர முகிகள் தேவை?



(1) 27 (2) 25 (3) 17

**2014**

- ***12***ஆம் ***13*** ஆம் வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை பூரணப்படுத்துவதற்கு பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க

12. 


(1)


(2)


(3)

13. 


(1)


(2)


(3)

**2015**

- ***14, 15*** ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருவைப் பூர்த்திசெய்வதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

14. 


(1)


(2)


(3)

15. 


(1)


(2)


(3)

16. நீரைக் கொண்ட ஒரு பாத்திரத்தின் அடியில் ஒரு நாணயம் உள்ளது. நீர்ப்பரப்பிற்கு மேலே இருந்து பார்க்கும்போது நாணயம் தெரியக்கூடிய இடம் A யைச் சரியாகக் காட்டும் உருவைத் தெரிவு செய்க.



(1)



(2)



(3)

Tamil Study

17. ஒரு தாளிலிருந்து A, B எனும் இது முக்கோணிகள் வெட்டப்பட்டன. முக்கோணி A யின் மீது முக்கோணி B ஐ வைக்கும்போது கிடைக்கத்தக்க வடிவத்தைக் காட்டும் உரு யாது?






(1) (2) (3)

**2016**

- *18, 19 ஆகிய வினாக்களின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.*

18.



(1) (2) (3)

19.



(1) (2) (3)

**2017**

- *20, 21 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.*

20.



(1) (2) (3)

Tamil Study





www.e-kalvi.com

21.




**2018**

22. கீழே தரப்பட்டுள்ள வடிவத்தை ஒரு சதுரமாக மாற்றுவதற்கு அதனுடன் சேர்க்கப்பட வேண்டிய அடைப்புகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை யாது?



*(1) 5 அடைப்புகள் (2) 9 அடைப்புகள் (3) அடைப்புகள்*

**2019**

23. உருவில் வெற்றிடத்திற்கு பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.




**2020**

24. பின்வரும் உருவில் வெறுமையாக உள்ள பகுதியை நிரப்புவதற்குப் பொருத்தமான பகுதிகளைக் கொண்ட விடை எது?




25. உரு I இல் நிழற்றிய கட்டங்கள் மாத்திரம் மறையக்கூடியவாறு உரு II இனை ஒட்டினால் கிடைக்கும் சதுர வலைக்கட்டத்தில் உள்ள கட்டங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 16
(2) 25
(3) 36




Tamil Study



நிதி: CF

26. 

ஒத்த மரக்குற்றிகளைப் பயன்படுத்தி ஆக்கப்பட்ட ஓர் அமைப்பு உருவில் தரப்பட்டுள்ளது. பெரிய சதுர மரக்குற்றியொன்று கிடைக்குமாறு இந்த அமைப்பைப் பூரணப்படுத்துவதற்கு மேலும் எத்தனை சிறிய மரக்குற்றிகள் தேவை?

(1) 5 (2) 8 (3) 9

## திறன்: மொழி பெயர்ப்பு

**2011**

● தரப்பட்டுள்ள கவிதையைக் கொண்டு 27, 28 ஆம் வினாக்களுக்கு விடை தருக

சிறகடிக்கும் பறவைகளின் கீத ஒலி கேட்கும்.
வீசும் தென்றல் காற்று உடலுக்கு குளிர்ச்சி தரும்.
மலரும் மலர்களோ எங்கும் மணம் பரப்பும்.
அதிகாலைப் பொழுதோ இன்பம் ஊட்டும்.

27. கவிதையில் குறிப்பிடப்படுவது, காலையில் வீசும் காற்று
(1) பறவைகளின் கீத ஒலியை கேட்கச் செய்யும் என்பதை
(2) உடலுக்குக் குளிர்ச்சி தரும் என்பதை
(3) மலர்கள் மணம் பரப்பும் என்பதை

28. காலையில் நடைபெறும் ஆனால் கவிதையில் குறிப்பிடப்படாத ஒரு விடயம்.
(1) குளிர்ச்சியான தென்றல் காற்று வீசுதல்.
(2) நறுமணமுள்ள மலர்கள் மலருதல்.
(3) ஒளி மெதுவாகப் பரவுதல்.

29. ஒரு விழாவிற்காகச் சில மாகாணங்களிலிருந்து வந்த பிள்ளைகளுக்கு வடிவத்திலும் நிறத்திலும் வேறுபட்ட இலச்சினைகள் வழங்கப்பட்டன.

| | |
|---|---|
| மத்திய மாகாணம் | - நீல நிறம் |
| வட மாகாணம் | - மஞ்சள் நிறம் |
| தென் மாகாணம் | - சிவப்பு நிறம் |

| | |
|---|---|
| ஆண் பிள்ளை | - வட்டம் |
| பெண் பிள்ளை | - நாற்பக்கல் |

இதற்கேற்ப சரியான கூற்று யாது?
(1) வட மாகாணத்தின் பெண் பிள்ளைகள் நீலநிற நாற்பக்கல்களை அணிந்திருந்தனர்
(2) மத்திய மாகாணத்தின் ஆண் பிள்ளைகள் நீலநிற வட்டங்களை அணிந்திருந்தனர்.
(3) தென் மாகாணத்தின் பெண் பிள்ளைகள் மஞ்சள் நிற நாற்பக்கலை அணிந்திருந்தனர்.

**2012**

● **பின்வரும் கவிதையைக் கொண்டு 30, 31 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.**

மரங்கொடியினைத் தழுவிவரும் தென்றல் காற்று, சுகம் தரும்
உரமான எம் உடல் உளத்திற்கு புத்துணர்வையும் தரும் - இந்த
உண்மையை உணர்ந்து மரங் கொடிதனை எம்முயிர் போல் காக்கும்
கடமையினைச் செய்வதே உன்னத செயலாம்.

30. எமது உடலிற்கும் உள்ளத்திற்கும் புத்துணர்வைத் தருவது.
(1) மரங் கொடி
(2) தென்றல் காற்று
(3) உன்னத செயலைச் செய்தல்

31. இக்கவிதை பிரதானமாக எமக்குக் கூறுவது

(1) உடல் உள்ளத்திற்கு புத்தணர்வு தரும் தென்றல் காற்று பற்றி

(2) மரங் கொடியைத் தென்றல் காற்று தழுவி வருவது பற்றி

(3) சூழலில் மரங் கொடியைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் பற்றி

32. முழு உருவத்தினதும் பரப்பளவு அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவின் எத்தனை மடங்காகும்?



(1) 8

(2) 10

(3) 12

33. முழு உருவத்தினதும் சுற்றளவு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் சுற்றளவின் எத்தனை மடங்காகும்?



(1) 4

(2) 6

(3) 8

**2013**

● கவிதையை வாசித்து 34, 35, 36 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

*பார்த்ததும் நல்ல ஆசையை உண்டாக்கும்*
*கண்களை சிமிட்டும் தலையை ஆட்டும்*
*அம்மா சந்தையிலிருந்து கொண்டு வந்த*
*அழகு மிக்க பொம்மை.*

34. பொம்மையைக் கொண்டுவந்து தந்தவர் யார்? எங்கேயிருந்து?

(1) அம்மா, சந்தையில் இருந்து

(2) அம்மா, கடையிலிருந்து

(3) அப்பா, சந்தையிலிருந்து

35. பொம்மையின் இரு இயல்புகள்

(1) கண்களைச் சிமிட்டுதல், கைகளை ஆட்டுதல்

(2) தலையை ஆட்டுதல், கண்களை சிமிட்டுதல்

(3) ஆடுதல், தலையை ஆட்டுதல்

Tamil Study

36. இக் கவிதையில் முக்கியமாக எதனைப் பற்றி கூறப்படுகின்றது
(1) பொம்மையின் பெறுமானம் பற்றி
(2) பொம்மை கிடைத்த விதம் பற்றி
(3) பொம்மையின் அழகு பற்றி

**2014**

- **37, 38** ஆம் வினாக்களின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.

37. ஆகாய விமானம் - விமான நிலையம் எனின் கப்பல் .......................... ஆகும்.
(1) நீர் (2) தரை (3) துறைமுகம்

38.  இற்கு  எனின்  இற்கு ...................... ஆகும்


(1)


(2)


(3)

**2015**

- பின்வரும் கட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு **39, 40** ஆகிய வினாக்களுக்கு விடையளிக்க

| | | | | | |
|---|---|---|---|---|---|
| △ | = | உதவி | ● | = | சரியான |
| ✻ | = | மிகவும் | □ | = | செய்தமைக்கு |
| ▲ | = | இனிமையானது | ♦ | = | நன்றி |
| ■ | = | அழகானது |  | = | கீதம் |
| ○ | = | உமது |  | = | இரக்கம் |

39. மரியாதையாக நடந்து கொள்வதற்கான கூற்றைக் காட்டும் குறியீட்டு வரிசையைத் தெரிவு செய்க
(1) ○ △ ■ ▲ (2) △ ○ ✻ ♦ (3) ○ △ ● ▲

40. மதிப்பைக் கணிக்கும் கூற்றை காட்டும் குறியீட்டு வரிசையைத் தெரிவு செய்க.

(1) ○  ✻ ♦ (2) ○  ● ■ (3) ○  ✻ ▲

Tamil Study

| புள்ளி | வலயக் கல்வி அலுவலகம், கிண்ணியா<br>தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான<br>முன்னோடிப் பயிற்சிப் பரீட்சை -2024<br>**திறன்: பிரசினம் தீர்த்தல்** | இல<br>4 |
|---|---|---|

**2011**

**சரியான விடையின் கீழ் கீறிடுக.**

01. சதுர வடிவமான மரக்கறித் தோட்டம் ஒன்றின் ஒரு பக்கத்தின் நீளம் 12 மீற்றர் ஆகும். அதன் எல்லை வழியே 3 மீற்றர் இடைத்தூரங்களில் கம்பித் தூண்கள் உள்ளன. அவ்வாறு உள்ள கம்பித் தூண்களின் எண்ணிக்கை யாது?
(1) 20 (2) 16 (3) 12

● ஒரு நிரையில் கண்ணன் தொடக்கத்திலிருந்து 12ஆவதாக நிற்கின்றான். அவன் கடைசியிலிருந்து 8 ஆவதாக நிற்கின்றான். இதற்கேற்ப.

02. நிரையில் எத்தனை நபர்கள் நிற்கின்றனர்?
(1) 19 (2) 20 (3) 21

03. அந்நிரையில் மோகன் தொடக்கத்திலிருந்து 5ஆவதாக நின்றால், அவனுக்குப் பின்னால் எத்தனை நபர்கள் நிற்கின்றனர்?
(1) 16 (2) 15 (3) 14

04. இன்று ஞாயிற்றுக்கிழமை. நேற்று முன் தினத்துக்கும் (முந்த நாள்) கடந்த திங்கட்கிழமைக்குமிடையே எத்தனை நாட்கள் இருந்தன?
(1) 1 (2) 2 (3) 3

05. ஒரு தொட்டியின் கொள்ளளவு 10 லீற்றர் ஆகும். ரஞ்சன் ஒரு தடவைக்கு நான்கு லீற்றர் வீதம் இட்டு அத்தொட்டியில் நீரை நிரப்புகின்றான். ஒவ்வொரு தடவைக்கும் பின்னர் அவருடைய தம்பி இரண்டு லீற்றர் வீதம் அந்நீரை வெளியே எடுக்கின்றார். ரஞ்சன் எத்தனை தடவை நீரை இட்ட பின்னர், முதன் முதலாகத் தொட்டி நிரம்பும்?
(1) 4 (2) 5 (3) 6

06. குகனிடம் இரண்டு ரூபாய் நாணயங்களாகவும் ஐந்து ரூபாய் நாணயங்களாகவும் ரூ. 23 உள்ளது. அதில் இருக்கத்தக்க இரண்டு ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கை யாது?
(1) 3 (2) 4 (3) 6

**2012**

07. கண்ணன் 14 விசுகோத்துப் பெட்டிகளைக் கடையில் வாங்கி வீட்டிற்குக் கொண்டுவரவேண்டி இருந்தது. அவன் ஒரு தடவை 4 விசுகோத்துப் பெட்டிகளை மாத்திரம் கொண்டு வரலாம் இதற்கேற்ப எல்லா விசுகோத்துப் பெட்டிகளையும் கொண்டு வருவதற்கு அவன் குறைந்தபட்சம் எத்தனை தடவை செல்ல வேண்டும்?
(1) 3 (2) 4 (3) 5

Tamil Study

08. முரளியின் வீட்டில் உள்ள கடிகாரத்தின் நேரம் குறித்த நேரத்திலும் பார்க்க 10 நிமிடம் பிந்தியது. இதற்கேற்ப முற்பகல் 6.30இற்கு வீட்டிலிருந்து புறப்பட்ட முரளி பாடசாலைக்குச் செல்லும் போது சரியான நேரத்தைச் காட்டும் பாடசாலைக் கடிகாரத்தின் நேரம் முற்பகல் 7.10 ஆக இருந்தது. அவன் வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்வதற்கு எடுத்த நேரம் எத்தனை நிமிடம்?

(1) 50 (2) 40 (3) 30

● 09, 10 ஆகிய வினாக்களுக்குப் பின்வரும் தகவல்களைக் கொண்டு விடை தருக.
2 வாழைப்பழங்களின் விலை ரூபாய் 30 ஆகும். ஒரு கொய்யாப்பழத்தின் விலை ஒரு வாழைப்பழத்தின் விலையிலும் பார்க்க ரூபாய் 5இனால் கூடியது. ஒரு மாம்பழத்தின் விலை ஒரு கொய்யாப்பழத்தினதும் ஒரு வாழைப்பழத்தினதும் விலைகளின் மொத்தத்திற்குச் சமம் எனின்.

09. ஒரு கொய்யாப்பழத்தின் விலை ரூபாய்

(1) 20 (2) 15 (3) 10

10. ஒரு மாம்பழத்தின் விலை ரூபாய்.

(1) 35 (2) 40 (3) 45

11. அடைப்பில் உள்ள மிகச் சிறிய ஒற்றை எண்ணை மிகப் பெரிய இரட்டை எண்ணால் பெருக்கும் போது கிடைக்கும் விடை யாது?

| | | | | |
|---|---|---|---|---|
| *6* | *5* | *4* | *23* | *15* |
| *7* | *19* | *33* | *8* | *3* |
| *10* | *2* | *30* | *17* | *29* |

(1) 90 (2) 58 (3) 50

12. 2013 ஆம் ஆண்டின் நடுவில் வரும் தினம் யாது?
   (1) யூன் 30
   (2) யூலை 01
   (3) யூலை 02

13. ஒக்ரோபர் 01 உலக சிறுவர் தினமாகும். 2013 ஆம் ஆண்டில் யனவரி 01 தொடக்கம் ஒக்டோபர் 01 வரையுள்ள நாட்களின் எண்ணிக்கை யாது?
   (1) 273
   (2) 274
   (3) 275

**2013**

14. பாடசாலைப் பிள்ளைகளின் சித்திர, கைப்பணிக் கண்காட்சி ஒரு வெள்ளிக்கிழமை ஆரம்பித்தது 8 நாட்களாக நடைபெற்றதெனின் முடிவடைந்த நாள் யாது?
   (1) சனிக்கிழமை
   (2) வெள்ளிக்கிழமை
   (3) வியாழக்கிழமை

Tamil Study

15. மூன்று மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை ஒலிக்கின்ற ஒரு கடிகாரம் உள்ளது. அது முற்றாக மு.ப. 07.00 இற்கு ஒலித்தது. அது அடுத்ததாக ஒலிக்கும் இரண்டு சந்தர்ப்பங்களைத் தருக.

(1) மு.ப 10 உம் பி.ப 01.00 உம்.
(2) மு.ப 11 உம் பி.ப 01.00 உம்.
(3) மு.ப 10 உம் பி.ப 02.00 உம்.

16. ஓர் இடத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்தது சிறுவன் ஒருவன் 20 மீற்றர் தெற்கு நோக்கியும் அவ்விடத்திலிருந்து 10 மீற்றர் கிழக்கு நோக்கியும் மீண்டும் 15 மீற்றர் வடக்கு நோக்கியும் சென்று அவ்விடத்தில் இருந்து மேற்கு நோக்கி 10 மீற்றர் சென்று பயணத்தை முடித்தான். அச்சிறுவன் இப்போது தொடக்க இடத்தில் இருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளார்?

(1) 15 மீற்றர்
(2) 10 மீற்றர்
(3) 5 மீற்றர்

**2014**

17. 1 தொடக்கம் 30 வரை உள்ள எண்களில் அடுத்துள்ள இரண்டு எண்களைக் கூட்டும் போது

(1) ஓர் இரட்டை எண் கிடைக்கும்
(2) ஓர் ஒற்றை எண் கிடைக்கும்
(3) ஓர் இரட்டை எண் அல்லது ஒற்றை எண் கிடைக்கும்

18. 175, 125, 141, 132 என்னும் எண்களை ஏறுவரிசையில் எழுதும்போது கிடைக்கும் முதலாம் எண்ணினதும் மூன்றாம் எண்ணினதும் நடுவில் இருக்கும் இலக்கங்கள் முறையே

(1) 2, 3
(2) 2, 4
(3) 7, 4

19. கீதாவின் தற்போதைய வயது 11 ஆகும். அவளுடைய தாயாரின் தற்போதைய வயது கீதாவின் வயதின் மூன்று மடங்கிலும் பார்க்க மூன்றினால் கூடியதாகும். இன்னும் நான்கு ஆண்டுகளில் தாயாருடைய வயது யாது?

(1) 36
(2) 37
(3) 40

20. ஆண்டில் சில மாதங்களுக்கு 31 நாட்களும் வேறு சில மாதங்களுக்கு 30 நாட்களும் உள்ளன. அவ்வாறெனின் 28 நாட்கள் உள்ள மாதங்களின் எண்ணிக்கை யாது?

(1) 1
(2) 2
(3) 12



Tamil Study

21. ஒரு குறித்த ஆண்டின் அக்டோபர் 17ஆம் தேதி வியாழக்கிழமை ஆகும். அவ்வாண்டின் நவம்பர் 17 ஆம் திகதி

(1) வெள்ளிக்கிழமை
(2) சனிக்கிழமை
(3) ஞாயிற்றுக்கிழமை

22. ஒரு பேருந்து தரிப்பிடத்திலிருந்து

* ஒவ்வொரு 30 நிமிடத்துக்கு ஒரு தடவை கொழும்புக்கு ஒரு பேருந்து புறப்படுகின்றது
* ஒவ்வொரு 45 நிமிடத்திற்கு ஒரு தடவை அநுராதபுரத்திற்கு ஒரு பேருந்து புறப்படுகின்றது
* விடியற் காலை 5.30 க்கு முதல் இரு பேருந்துகளும் கொழும்புக்கும் அனுராதபுரத்திற்கும் புறப்பட்டுச் செல்கின்றன.

மறுபடியும் இரு பேருந்துகள் கொழும்புக்கும் அனுராதபுரத்திற்கும் ஒரே தடவையில் எப்போது புறப்பட்டுச் செல்லும்?

(1) மு.ப 6. 45
(2) மு.ப 7.00
(3) மு.ப 7.30

23. நீலாவிடம் ரூபா 100, ரூபா 50, ரூபா 20 நாணயத் தாள்களில் மாத்திரம் ரூபா 250 உண்டு. அவளிடம் உள்ள ரூபா 20 தாள்களின் எண்ணிக்கை யாது?

(1) 4
(2) 5
(3) 10

● A, B, C என்னும் மூன்று மரங்களில் பறவைகள் பின்வருமாறு இருக்கின்றன.

* மரம் C இல் இருக்கும் எண்ணிக்கையிலும் பார்க்க இரு மடங்கு பறவைகள் மரம் B இல் இருக்கின்றன.
* B, C ஆகிய இரு மரங்களிலும் உள்ள பறவைகளின் மொத்த எண்ணிக்கை மரம் A இல் உள்ள பறவைகளின் எண்ணிக்கைக்குச் சமம்.
* மரம் B இலிருந்து ஒரு பறவை மரம் C இற்கு பறந்து செல்லும்போது மரம் B இல் உள்ள பறவைகளின் எண்ணிக்கை 3 ஆகும்.

24. மரம் A இல் உள்ள பறவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 6
(2) 5
(3) 3

25. மூன்று மரங்களிலும் உள்ள பறவைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 6
(2) 10
(3) 12





Tamil Study

26. * ஓர் இலக்கத்தை நினைத்துக் கொள்க.
* அதனை இருமடங்காக்குக
* அதிலிருந்து இரண்டைக் கழிக்குக.
* அதனை ஆறினால் வகுக்குக. இப்போது மூன்றினால் பெருக்குக.
* அதனுடன் இரண்டைக் கூட்டுக.

கிடைக்கும் விடை நீர் முதலில் சிந்தித்த இலக்கத்திற்கு

(1) சமம்
(2) ஒன்றினால் கூடியது
(3) ஒன்றினால் குறைந்தது.

**2015**

27. பெப்ரவரி மாதத்தில் 5 ஆம் நாள் புதன்கிழமை ஆகும். அம்மாதத்திலுள்ள ஞாயிற்றுக்கிழமைகளில் எண்ணிக்கை யாது?

(1) 3
(2) 4
(3) 5

28. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நான்கு கால் கதிரைகள் நான்கு உள்ளன. கால்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 16
(2) 19
(3) 20

29. ஒரு சைக்கிளை வாங்குவதற்கு ரூபா 8 500 தேவைப்பட்டது. என்னிடம் ரூபாய் 4 800 இருந்தது மீதியை இரு நண்பர்களிடமிருந்து பெற்றுக்கொண்டேன். பெற்றுக் கொண்ட பணம்.

(1) ரூபாய் 2 400 உம், ரூபா 1 300 உம்.
(2) ரூபாய் 2 500 உம் ரூபா 2 300 உம்.
(3) ரூபாய் 5 200 உம் ரூபா 3 300 உம்.

30. ஒரு பேருந்தில் சென்ற ஒரு மாணவன் தனது பயணச்சீட்டுக்காக நடத்துனரிடம் ரூபா 20 ஐ வழங்கியபோது நடத்துனர் அம்மாணவனிடம் மேலும் ரூபா 2 ஐப் பெற்று ரூபா 10 ஐ மீதியாகக் கொடுத்தார். பேருந்துக் கட்டணம் எவ்வளவு?

(1) ரூபா 10
(2) ரூபா 12
(3) ரூபா 14





Tamil Study

31. 100 தொடக்கம் 110 வரையுள்ள எண்களை எழுதும் போது '0' எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை

(1) 9

(2) 10

(3) 12

32. ஒரு பிள்ளை அதன் வயது 10, 16 ஆக இருக்கும்போது பிரபலமான இரு பரீட்சைக்கு தோற்ற வேண்டும். கீதா நிலானியிலும் பார்க்க ஐந்து வயதினால் மூத்தவள். கீதா முதலாவது பரீட்சைக்கு 2017 ஆம் ஆண்டில் தோற்றுவாராயின் நிலானி இரண்டாவது பரீட்சைக்கு தோற்ற வேண்டிய ஆண்டு எது?

(1) 2022

(2) 2028

(3) 2032

33. **4, 5** என்னும் எண்களினாலும் மீதியின்றி வகுபடக்கப்படக் கூடியனவும் 25 இற்கும் 75 க்கும் இடையே உள்ளனவுமான எண்களின் எண்ணிக்கை எத்தனை?

(1) 2

(2) 4

(3) 5

34. ஒரு வீட்டில் தொலைக்காட்சி பி.ப 1.00 தொடக்கம் பி.ப 3.15 வரைக்கும் கணனி பி.ப 2.15 தொடக்கம் பி.ப 3.30 வரைக்கும் மின்விசிறி பி.ப 2.30 தொடக்கம் பி.ப 3.45 வரைக்கும் தொழிற்பட்டன. மூன்று உபகரணங்களும் ஒரே வேளையில் தொழிற்பட்ட நேரம்

(1) 45 நிமிடம்

(2) 1 மணித்தியாலம்

(3) 1 மணித்தியாலம் 15 நிமிடம்

35. மருந்து குடிப்பதற்காக நோயாளி ஒருவருக்கு வைத்தியர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை வழங்கினார்

''ஒரு தடவையில் 2 வில்லைகள் வீதம் நாளொன்றுக்கு 3 தடவைகள் (சாப்பாட்டுக்குப் பின்னர்) எடுக்கவும்''

நோயாளிக்கு 50 மருந்து வில்லைகள் தரப்பட்டுள்ளன. முதலாவது மருந்துவேளை காலை சாப்பாட்டுக்கு பின்னர் எடுக்கப்பட்டதாயின் அம்மருந்துவில்லைகளின் எண்ணிக்கை எத்தனை முழு நாட்களுக்குப் போதுமானது?

(1) 8

(2) 9

(3) 25





Tamil Study

36.

| | |
|---|---|
| 52 | 84 |
| ....... | ....... |

பெட்டியில் உள்ள இரு வெற்றிடங்களிலும் வரவேண்டிய இரு எண்களில் ஒன்று மற்றையதின் மூன்று மடங்காக உள்ளது. அந்நான்கு எண்களினதும் கூட்டுத் தொகை 200 ஆகும். வெற்றிடங்களில் இருக்க வேண்டிய எண்கள் யாவை?

(1) 16, 48
(2) 18,54
(3) 19, 57

**2016**

37. இலங்கைக்குச் சுதந்திரம் எந்த நூற்றாண்டில் எந்த தசாப்பதத்தில் கிடைத்தது?
(1) 19 ஆம் நூற்றாண்டின் 5 ஆம் தசாப்தத்தில்
(2) 20 ஆம் நூற்றாண்டின் 4 ஆம் தசாப்தத்தில்
(3) 20 ஆம் நூற்றாண்டின் 5 ஆம் தசாப்தத்தில்

38. 2000.05.01 ஆம் திகதி இலங்கையில் பிறந்த ஒருவர் 2016. 06.01 ஆம் திகதி வரை சூரியனைச் சுற்றிப் பயணம் செய்துள்ள முழுச்சுற்றுக்களின் எண்ணிக்கை யாது?
(1) 10
(2) 16
(3) 17

39. ஒரு பாடசாலையில் ஒரு குறித்த விழாவின் தொடக்கத்தில் 9 மெழுகுவர்த்திகள் கொளுத்துவதற்கு தயார் செய்யப்பட்டுள்ளன. ஒரு மெழுகுவர்த்தி ஒளிரும் நேரம் 30 நிமிடம் ஆகும். 9 மெழுகுவர்த்திகளை ஒரே தடவையில் கொளுத்தினால் அவை எல்லாம் எவ்வளவு நேரத்துக்கு ஒளிரும்?
(1) 30 நிமிடம்
(2) 270 நிமிடம்
(3) 300 நிமிடம்

40. ஒரு அரசாங்கப் பாடசாலையில் முதலாந் தவணைப் பரீட்சை மார்ச் 18 ஆந் திகதி வியாழக்கிழமை தொடங்கியது. மார்ச் 23ஆம் தேதி பொது விடுமுறை தினமாகும். தவணைப் பரீட்சை 6 நாட்கள் நடைபெற்றது. தவணைப் பரீட்சை முடிவடைந்த நாள் யாது?
(1) திங்கட்கிழமை
(2) வியாழக்கிழமை
(3) வெள்ளிக்கிழமை

Tamil Study

| புள்ளி | **வலயக் கல்வி அலுவலகம், கிண்ணியா**<br>தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முன்னோடிப் பயிற்சிப் பரீட்சை -2024<br>**திறன்: பிரசினம் தீர்த்தல் , நியாயப்படுத்தல்** | **இல 5** |
|---|---|---|

**2014**

**சரியான விடையின் கீழ் கீறிடுக.**

01. இலங்கைக்கு மேற்கே இங்கிலாந்தும் கிழக்கே ஜப்பானும் உள்ளன. இலங்கையின் நேரம் நண்பகல் 12.00 ஆக இருக்கும்போது.
    (1) இங்கிலாந்தில் முற்பகலாக இருத்தல் வேண்டும்
    (2) ஜப்பானில் முற்பகலாக இத்தல் வேண்டும்
    (3) ஜப்பான், இங்கிலாந்து ஆகிய இரு நாடுகளிலும் பிற்பகலாக இருத்தல் வேண்டும்

02. A, B, C, D என்னும் ஒவ்வொரு முக்கோணியிலும் உள்ள மிகப் பெரிய இலக்கத்தைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகச் சிறிய எண் யாது?

**2016**

    (1) 9 765
    (2) 5 679
    (3) 2 248




03. ஒரு பேருந்தில் இருவர் வீதம் அமரத்தக்க 15 பயணி ஆசனங்களும் ஆறு பயணிகள் அமரத்தக்க ஒரு பயணி ஆசனமும் உள்ளன. பேருந்தில் அமர்ந்து செல்லத்தக்க பயணிகளின் மிகவும் கூடிய எண்ணிக்கை யாது?
    (1) 21
    (2) 36
    (3) 42

04. 4 பிள்ளைகளுக்கும 3 வயதுவந்தவர்களுக்கும் பால் தேநீர் வழங்குவதற்காக ஒரு லீற்றர் பால் தேவைப்பட்டது. அதற்கேற்ப 20 பிள்ளைகளுக்கும் 15 வயது வந்தவர்களுக்கும் பால் தேநீர் வழங்குவதற்கு எத்தனை லீட்டர் பால் தேவை?
    (1) 5
    (2) 7
    (3) 15


நிதி: CF
www.e-kalvi.com

05. 1 தொடக்கம் 100 வரை எண்களை எழுதும் போது இலக்கம் 2 எத்தனை தடவைகள் எழுதப்படவேண்டும்?

(1) 10
(2) 19
(3) 20

06. நீளம், அகலம், உயரம் ஆகியன 5 cm வீதம் ஒரு மரச் சதுரமுகியிலிருந்து நீளம், அகலம், உயரம் ஆகியன 1 cm வீதம் உள்ள எத்தனை சிறிய சதுரமுகிகளை வெட்டலாம்?

(1) 125
(2) 25
(3) 15

07. ஒரே இலக்கம் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் இருக்கத்தக்கதாக 20 அட்டைகளில் ஓர் இலக்கம் வீதம் எழுதப்பட்டுள்ளது. 10 அட்டைகளில் இருக்கும் இலக்கங்களின் கூட்டுத்தொகை 12 ஆகும். எஞ்சியுள்ள 10 அட்டைகளில் இருக்கும் இலக்கங்களின் கூட்டுத்தொகைக்கு இருக்கத் தக்க ஆகவும் கூடிய பெறுமானம்

(1) 20
(2) 60
(3) 90

**2017**

08. 1 தொடக்கம் 25 வரை உள்ள எல்லா ஒற்றை எண்களையும் எழுதும்போது இலக்கம் 1 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 7
(2) 8
(3) 13

09. 

ஐந்து சம சதுரங்களை ஒரு நிரையில் வைத்துத் தயார்செய்யப்பட்ட பின்வரும் உருவில் உள்ள செவ்வகத்தின் சுற்றளவு 180 சென்றிமீற்றர் ஆகும். இங்கு ஒரு சதுரத்தின் பரப்பளவு எத்தனை சதுர சென்றிமீற்றர்?

(1) 225
(2) 256
(3) 400

10. 31 நாட்களைக் கொண்ட ஒரு மாதத்தில் செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை ஆகிய நாட்கள் ஐந்து வீதம் உள்ளன. அம்மாதத்தின் 24 ஆம் திகதி என்ன நாளாகும்

(1) புதன்கிழமை
(2) வியாழக்கிழமை
(3) வெள்ளிக்கிழமை

Tamil Study

11. காலை 6.45 இற்குக் கொழும்பிலிருந்து மாத்தறையை நோக்கி ஒரு மாறாத கதியில் நிறுத்தாமல் செலுத்தப்படும் ஒரு பேருந்தின் பயணம் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.




| அடைந்த நகரம் | நகரத்தில் உள்ள கிலோமீற்றர் தூண் | அடைந்த நேரம் |
|---|---|---|
| காலி | 120 km | காலை 10.45 |
| மாத்தறை | 165 km | .................... |

இதற்கேற்ப பேருந்து மாத்தறை நகரத்தைப் பிற்பகல் எத்தனை மணிக்கு அடையும்?

(1) 12.15 (2) 12.30 (3) 12.45

12. 


A, B, C, D என்னும் நான்கு குழுக்களில் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கைகள் இவ்வுருவில் வகை குறிக்கப்பட்டுள்ளன.
குழு A இல் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை 48 ஆகும். இதற்கு ஏற்ப B, C ஆகிய இரு குழுக்களிலும் உள்ள பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 24 (2) 36 (3) 42

13. ஒரு மாம்பழத்தின் விலை ரூபாய் 25 ஆகும். ஒரு அப்பிள் பழத்தின் விலை ரூபா 40 ஆகும் மாம்பழம் ஆப்பிள் பழம் ஆகியவற்றில் ஒரு குறித்த எண்ணிக்கையை வாங்குவதற்கு கீதா செலவிட்ட பணம் ரூபாய் 205 ஆகும்.
கீதா வாங்கிய மாம்பழங்களில் எண்ணிக்கை யாது?

(1) 2 (2) 4 (3) 5

14. சங்கரி முதல் நாளில் ஓர் உண்டியலில் ரூபா 10 ஐ இடுகின்றாள் அவள் அதன் பின்னர் ஒவ்வொரு நாளும் முந்திய நாளில் இட்ட பணத்திலும் பார்க்க ரூபா 10 வீதம் கூடுதலாக உண்டியலில் இடுகின்றாள் இவ்வாறாக உண்டியலில் சேரும் மொத்தப் பணம் எத்தனையாம் நாளில் முதன் முதலாக ரூபா ரூபா 500 கூடுதலாக இருக்கும்.

(1) 8
(2) 9
(3) 10

15. ஒரு பாத்திரத்தில் 1.5 லீற்றர் நீர் உள்ளது. அப்பாத்திரத்தில் உள்ள ஒரு சிறிய துவாரத்திலிருந்து ஒவ்வொரு நிமிடமும் 50 மில்லி லீற்றர் நீர் கசிந்து வெளியேறுகின்றது. அதற்கு ஏற்ப அப்பாத்திரம் முற்றாக வெறுமையாதற்கு எடுக்கும் நேரம் எத்தனை நிமிடம்?

(1) 20
(2) 30
(3) 40

16. கீழே தரப்பட்டுள்ள இரு உருக்களுக்கும் ஏற்ப Ⓐ அளவுள்ள ஓர் அட்டைத்தாளிலிருந்து Ⓑ அளவுள்ள எத்தனை வட்டங்களை உயர்ந்த பட்சம் வெட்டலாம்?




(1) 20
(2) 24
(3) 30

2018

17. 49. தொடக்கம் 99 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும் போது இலக்கம் 5 ஐ எழுத வேண்டிய தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 10
(2) 14
(3) 15

18. 4 ✱ 2 = 4 ☆ 2 என்னும் கணிதத் தொடர்புடமையில் ✱ , ☆ என்னும் குறியீடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள இரு கணிதச் செய்கைகளும் யாவை?

(1) + உம் × உம்   (2) + உம் ÷ உம்   (3) − உம் ÷ உம்

19. ஓர் அனர்த்தம் காரணமாக மே 14 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் உட்படத் தொடர்ச்சியாக 9 நாட்களுக்கு ஒரு பாடசாலை மூடப்பட்டது அப்பாடசாலை மறுபடியும் திறக்கப்பட்ட தினம்.

(1) மே 22 செவ்வாய்க்கிழமை
(2) மே 23 செவ்வாய்க்கிழமை
(3) மே 23 புதன் கிழமை

20. ஒரு மாணவனின் வீட்டிலிருந்து பாடசாலைக்கு உள்ள தூரம் 500 மீற்றர் ஆகும். அவன் காலையில் பாடசாலைக்குச் செல்லும் போது மொத்த தூரத்தில் அரைவாசிக்குச் சென்று திரும்பி வீட்டுக்கு வந்து மறுபடியும் பாடசாலைக்குச் சென்றான். அவன் சென்ற மொத்த தூரம்

(1) 750 மீற்றர்
(2) 1000 மீற்றர்
(3) 1250 மீற்றர்

Tamil Study

21. ஒரு சங்கத்தில் 10 உறுப்பினர்கள் உள்ளனர். ஒவ்வொரு மாதமும் ஒரு தடவை உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலின் ஒழுங்குமுறைக்கு ஏற்ப ஒவ்வோர் உறுப்பினரினதும் வீட்டில் சங்கத்தின் கூட்டம் நடைபெறுகின்றது. முதலாம் உறுப்பினரின் வீட்டில் கூட்டம் பெப்ரவரி மாதத்தில் நடைபெற்றது. அவருடைய வீட்டில் அடுத்ததாக கூட்டம் எம்மாதத்தில் நடைபெறும்?

(1) ஒக்டோபர்

(2) நவம்பர்

(3) டிசம்பர்

**2019**

22. சங்கர் ஓர் ஏணியின் நான்காம் படியின் மீது நிற்கின்றான். மேலும் மூன்று படிகள் ஏறும்போது அவன் ஏணியின் நடுவில் உள்ள படியை வந்து சேருவான். ஏணியில் உள்ள படிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 10

(2) 13

(3) 14

23. ஒரு பிள்ளை வேறு நான்கு பிள்ளைகளை ஓர் ஆற்றின் அக்கரைக்கு கொண்டு சென்று அவர்கள் எல்லோரையும் அங்கு இருக்கும் ஒரு பிள்ளையுடன் நிறுத்தி வைத்தபின் மீண்டும் இக்கரைக்கு வந்து மேலும் மூன்று பிள்ளைகளுடன் அக்கரையில் இருக்கும் பிள்ளைகளுக்கு அருகில் சென்றான். இப்போது அக்கரையில் இருக்கும் பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 7

(2) 8

(3) 9

24. நிமலன் பிறக்கும்போது அவனுடைய தாயாரின் வயது 25 ஆகும் நிமலனின் தம்பி பிறக்கும் போது தாயாரின் வயது 29 ஆகும். நிமலனின் தற்போதைய வயது 10 எனின். அவனுடைய தம்பியின் தற்போதைய வயது யாது?

(1) 4

(2) 5

(3) 6

25. ஒரு சமதள நிலத்தில் நிமலன் விமலனுக்கு 20 மீற்றர் கிழக்கே நிற்கின்றான். நிமலனை நோக்கி விமலன் செல்லத் தொடங்கும் கணத்தில் நிமலன் விமலனின் கதியின் இரு மடங்கான கதியில் கிழக்கு நோக்கிச் செல்கின்றான். விமலன் 10 மீற்றர் தூரம் நிமலனை நோக்கிச் சென்றபோது இருவருக்குமிடையே உள்ள தூரம் எத்தனை மீற்றர்?

(1) 10

(2) 20

(3) 30

Tamil Study

26. [01], [02] என்றவாறாக [50] வரையில் எண்களை எழுதும் போது 0 இலக்கம் எத்தனை தடவைகள் இடம் பெறும்?

(1) 7
(2) 13
(3) 14

27. மூன்று வகுப்புகளில் உள்ள மாணவர் எண்ணிக்கை 36, 37, 38 ஆகும் அவற்றுள் ஒரு வகுப்பில் ஆண்களின் எண்ணிக்கையை விட மூன்று பெண்பிள்ளைகள் கூடுதலாக உள்ளனர். அந்த வகுப்பில் உள்ள மொத்த மாணவர் எண்ணிக்கை யாது?

(1) 36 (2) 37 (3) 38

28. 

சதுரவடிவத் தகடு ஒன்றின் நான்கு மூலைகளிலும் உருவில் நிழற்றிக்காட்டியவாறு சிறிய நான்கு சதுரப் பகுதிகள் வெட்டி நீக்கப்படுகின்றன. இப்போது மீதியாக உள்ள பகுதியின் சுற்றிவர உள்ள நீளம் முன்னர் இருந்த தகட்டின் சுற்றிவர உள்ள நீளத்திலும்

(1) மிகக் குறைவானது
(2) சமமானது
(3) மிகக்கூடுதலானது

29. காகிதப் பொதி ஒன்று இறுக்கமாக இருக்குமாறு அதனைச் சுற்றி இறப்பர் நாடா ஒன்று இடப்பட்டுள்ள விதம் உருவில் காட்டப்பட்டுள்ளது. இப்போது இறப்பர் நாடா அதன் ஆரம்ப நீளத்திலும் இரண்டு மடங்கு நீளமுடையதாக இழுபட்டுக் காணப்படுகின்றது. பொதியின் அளவீடுகள் உருவில் தரப்பட்டுள்ளன. இறப்பர் நாடாவின் ஆரம்ப நீளம் எவ்வளவு?




(1) 12.5 cm
(2) 25 cm
(3) 50 cm

30. வகுப்பில் உள்ள ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் மாறிமாறி இருக்கும் விதத்தில் ஒரு வரிசையில் இருந்தனர். வரிசையின் முதலில் ஓர் ஆண் பிள்ளை இருந்தார். எனின் வரிசையில் இறுதியில் நான்கு பெண் பிள்ளைகள் அருகருகே இருக்க நேர்ந்தது. வரிசையில் இருந்த மொத்தப் பிள்ளைகளின் எண்ணிக்கை 45 ஆகும். அங்கு இருந்த ஆண் பிள்ளைகள் எத்தனை?

(1) 20 (2) 21 (3) 22

31. 


வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?

(1) 7 (2) 8 (3) 9

tamilstudy

32. ராதா, சீதா, மீனா, காஸிம், சுனில் ஆகிய ஐவரில் ராதாவிலும் வயது குறைவானோர் மூன்று பேர் மட்டுமே உள்ளனர். காஸிமிலும் வயது குறைவானோர் இரண்டு பேர் மட்டுமே உள்ளனர். சுனில் மாத்திரமே சீதாவிலும் இளையவர். வயதில் கூடியவர் யார்?

(1) மீனா (2) ராதா (3) காஸிம்

33. A, B ஆகிய பாத்திரங்களில் உள்ள அரிசியில் சரி பாதி வீதம் வெளியே எடுத்து அவை அப்பாத்திரங்கள் இரண்டிலும் மாற்றி இடப்பட்டன. இப்போது பாத்திரம் A இல் உள்ள அரிசியின் அளவானது பாத்திரம் B இல் உள்ள அரிசியின் அளவிலும்




(1) மிகக் குறைவானது
(2) சமமானது
(3) மிகக் கூடுதலானது

**திறன்: நியாயப்படுத்தல்**

**2013**

- மூன்று பாடசாலைகளிலிருந்து ஒரு விழாவிற்கு வந்த ஆசிரியர்களுக்கும் பிள்ளைகளுக்கும் பின்வரும் நிறங்களையும் வடிவங்களையும் கொண்ட இலச்சினைகள் வழங்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| கம்பர் பாடசாலை | = நீலம். | வள்ளுவர் பாடசாலை | = பச்சை |
| இளங்கோ பாடசாலை | = சிவப்பு | ஆசிரியர்கள் | = வட்டம் |
| ஆண்பிள்ளைகள் | = முக்கோணி | பெண்பிள்ளைகள் | = சதுரம் |

34. கம்பர் பாடசாலையின் ஆண்பிள்ளைகளுக்கு கிடைத்துள்ள இலச்சினை யாது?




(1) (2) (3)

35. பச்சை நிற வட்டம் உள்ள இலச்சினை யாருக்கு கிடைத்தது?

(1) கம்பர் பாடசாலையின் ஆசிரியர்களுக்கு
(2) இளங்கோ பாடசாலையின் ஆண்பிள்ளைகளுக்கு
(3) வள்ளுவர் பாடசாலையின் ஆசிரியர்களுக்கு

**2014**

36. எல்லாத் தோடம்பழங்களும் எலுமிச்சம்பழங்களாகும். வேறு எதுவும் எலுமிச்சம்பழம் அன்று அவ்வாறெனில்

(1) எல்லா எலுமிச்சம்பழங்களும் தோடம்பழங்களாகும்.
(2) சில எலுமிச்சம்பழங்கள் தோடம்பழங்கள் ஆகும்
(3) தோடம்பழங்கள் எலுமிச்சம் பழங்கள் அல்ல

Tamil Study

37. ஒரு தவணைப் பரீட்சையில்

* ஆஷா கீதாவிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளாள்

* கீதா சீதாவிலும் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளாள்

* சீதா ஆஷாவிலும் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளாள்

கூடுதலான புள்ளிகளையும் குறைந்த புள்ளிகளையும் பெற்ற பிள்ளைகள் இருவர் முறையே

(1) சீதா, கீதா (2) கீதா, சீதா (3) சீதா, ஆஷா

38.




இவ்விரு பாத்திரங்களையும் மாத்திரம் பயன்படுத்தி 4 லீற்றர் நீரைச் சரியாக அளக்க முடியுமா?

(1) முடியும்

(2) முடியாது

(3) விடைளிப்பதற்கு மேலும் தகவல்கள் தேவை

**2015**

39. சிவப்பு, நீலம், செம்மஞ்சள், மஞ்சள், வெள்ளை எனும் ஐந்து நிறக் கீற்றுக்களைக் கொண்ட ஒரு கோடி உருவில் தரப்பட்டுள்ளது.




* கொடியின் 4வது கீற்று வெள்ளை நிறமானது

* சிவப்பு நிறக் கீற்றிலிருந்து மூன்றாவதாக இருக்கும் கீற்று நீல நிறமானது.

* செம்மஞ்சள் ஆகிய நிறக் கீற்றும் மஞ்சள் நிறக் கீற்றும் அடுத்தடுத்து இருப்பதில்லை

இதற்கேற்ப 1, 5 ஆகிய கீற்றுக்களுக்கு இருக்கக்கூடிய நிறங்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவுசெய்க

(1) மஞ்சள், நீலம் (2) செம்மஞ்சள், நீலம் (3) சிவப்பு, செம்மஞ்சள்

**2018**

40. மரம் இல்லையேல் நீர் இல்லை - நீர் இல்லையேல் நாம் இல்லை
புவியில் மரங்களைக் காக்கும் - கடமை இருப்பது எமது கையில்

இக்கவிதையில் தரும் **முழுமையான** கருத்து

(1) நீர்வளத்தைப் பாதுகாக்க வேண்டும்

(2) நீர் இல்லாதபோது மரங்கள் இல்லாது போகும்

(3) காட்டு வளத்தைக் காக்க வேண்டும்

TamilStudy

இல
**G**

# வலயக் கல்வி அலுவலகம், கிண்ணியா

தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான
முன்னோடிப் பயிற்சிப் பரீட்சை -2024

**– தொடர்புகளை இனங்காணல் –**

**2011**

**சரியான விடையின் கீழ் கீறிடுக.**

- தரப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கேற்ப கீழே உள்ள 10, 11 ஆகிய வினாக்களுக்கு விடை தருக
  சோடிச் சொற்களுக்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

*01.* அறிவு - பொழுதுபோக்கு


(1)


(2)


(3)

*02.* ஒளி - வெப்பம்


(1)


(2)


(3)

- குறைந்த தொடர்பு உள்ள உருச் சோடி இருக்கும் அடைப்பைத் தெரிவு செய்க.

*03.*


(1)


(2)


(3)

*04.*


(1)


(2)


(3)

*05.* உருக் கோலத்தில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.




(1)


(2)


(3)

tamilstudy

*06.* இக்கோலத்தில் C,D ஆகியவற்றிற்குப் பொருத்தமான எண்கள் முறையே யாவை?




*(1) 30 உம் 35 உம் (2) 40 உம் 45 உம் (3) 33 உம் 38 உம்*

*07.* இக்கோலத்தில் A, B ஆகியவற்றிற்குப் பொருத்தமான எண்கள் முறையே யாவை?




*(1) 4உம் 6உம் (2) 6உம் 4உம் (3) 8உம் 4உம்*

**2012**

● மிகவும் நெருங்கிய தொடர்பு உள்ள உருச் சோடிக்குரிய அடைப்பைத் தெரிவு செய்க.

*08.*


*(1)*


*(2)*


*(3)*

*09.*


*(1)*


*(2)*


*(3)*

● தரப்பட்டுள்ள உருக்களைக் கவனத்திற்கொண்டு விடை தருக.



A B C D E

